DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | | |
|---|---|---|
| Sessions Case | - | S.C **No. 188/2016** |
| Deposition of witness for | - | P.W. 13 |
| Name | - | விஜயலெட்சுமி |
| Father's Name/ Husband's Name | - | |
| Village | - | |
| Taluk | - | |
| Caste | - | |
| Calling | - | |
| Religion | - | |
| Age | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **06.06.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடக்கு வட்டம் பொதும்பு 2 வது பிட்டில் கிராம நிர்வாக அதிகாரியாக பணி புரிகிறேன். 2.8.2015ல் மாடக்குளம் கிராமத்தில் வேலை பார்த்த போது காலை 5 மணிக்கு ஒரு போன் கால் தொலைபேசி வந்தது எஸ். எஸ்.காவல் நிலையத்திற்கு வருமாறு எதிரிகளை விசாரிக்குமாறு வரச் சொன்னார்கள். நானும் தலையாரியும் 5 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்றோம். அதற்கு ஒரு பத்து நிமிடத்திறகு முன்பு தான் போன் வந்த்து. விஸ்வநாதன், முத்துக்குமார் ஆகியோரை எங்கள் முன்னிலையில் விசாரணை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். முதலில் எதிரி விஸ்வநாதன் வாக்குமூலம் கொடுத்தார். நான் பிஸ்னஸ் செய்வதில் 5 லட்சம் வரை நட்டம் ஆகி விட்டது. என்னை ஏமாற்றி விட்டார்கள் என்றும் அதன் பிறகு கேட்டரிங் வேலை போகும் போது முத்துக்குமார் என்பவரிடம் பழக்கம் ஏற்ப்பட்டது என்று வாக்குமூலம் கொடுத்தார். முத்துக்குமாரும், விஸ்வநாதனும் தனக்கு பண கஷ்டம் உள்ளது

என்றும் அதனால் எங்கையாவது கொள்ளை அடிப்போம் என்று கூறினார். முத்துக்குமார் விஸ்வநாதனிடம் தனக்கு போலிஸ் கேஸ் இருப்பதாகவும், அதனால் கை கிளவுஸ் ஏதாவது வாங்கனும் என்று பேசினோம் என்று அதன் படி 4, 5 வீடு பிளான் பண்ண படி தோல்வி அடைந்தது என்றும் அதன் பிறகு விஸ்வநாதனுக்கு பெரியம்மா மகன் வீடு பைபாஸ் ரோடு, நேரு நகரில் இருப்பதாகவும் அங்கு சென்று ஏதாவது பார்ப்போம் என்று கூறியதாகவும் அதன் பேரில் முத்துக்குமார் அண்ணன் வீட்டிற்கு அழைத்து சென்றதாகவும் அவர் அண்ணன் வெங்கடேசன் வீட்டில் டீ, காபி கொடுத்ததார் என்றும் 31.7.2015 அன்று மதியம் 2.15 மணிக்கு முத்துக்குமாரின் அண்ணன் வீட்டிறகு சென்றதாகவும் முத்துக்குமாரை படிக்கட்டில் உட்கார வைத்து விட்டு அண்ணன் மனைவியிடம் விஸ்வநாதன் பேசினார் என்றும் அப்போது அண்ணன் இல்லை என்றும் சைகையில் முத்துக்குமாரை கூப்பிட்டவுடன் முத்துக்குமார் வந்தா என்றும் அதன் பின்பு வெங்கடேசனின் மனைவீயை முத்துக்குமார் கத்தியால் குத்தி விட்டு சோபவில் தள்ளியதாகவும் அதன் பின் அந்த அம்மா போட்டிருந்த தாலி செயின், மோதிரம், குண்டு. காசு , செல்போன் ஆகியவற்றை எடுத்து விட்டு ஓடி விட்டதாக வாக்குமூலம் கொடுத்தார். அதன் பின்பு இருவரும் தலைமறைவு ஆனார்கள் என்றும் 2.8.2015 அன்று விஸ்வநாதனை கைது பண்ணார்கள் என்றும் அதை அண்ணாநகரில் உள்ள Fedrel Bank ல் 43000க்கு அடகு வைத்தோம் என்றும் அதில் முத்துக்குமார்க்கு 3000 கொடுத்ததாகவும், 22500 யை விஸ்வநாதன் குடும்பத்திற்கு கொடுத்ததாகவும் சுமித்ரா என்ற பெண்ணிற்கு 9910 ரூ கொடுத்ததாகவும் வாக்குமூலம் கொடுத்தார். அதே போல் முத்துக்குமார் தனத வாக்குமூலத்தில் அந்த அம்மாவை வெங்கடேசனின் மனைவியை தூக்கி கொண்டு பெட் ரூம் க்கு சென்று முத்துக்குமார் உடலுறவு செய்ததாகவும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். அன்றைய தினமே காலை 8 மணிக்கு விஸ்வநாதன் வீட்டில் பொருள்கள் இருப்பதாக விஸ்வநாதன் சொன்ன வாக்குமூலத்தின் அடிப்படையில் நானும், தலையாரியும் ஒரு வாகனத்திலும் எஸ்.ஐ, போலிசார், எதிரிகள் ஆகியோர் விஸ்வநாதன் வீட்டிற்கு சென்றோம். விஸ்வநாதன் தனது ஒப்புதல் வாக்குமுல்த்தில் ரத்தம் படிந்த தனது ஆடை மற்றும் TN 64 C 3229 வாகனமும் இருப்பதாக சொன்னதான் பேரில் நாங்கள் சென்றோம். **விஸ்வநாதனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-7.** அதன் பேரில்

விஸ்வநாதன் வீட்டிற்கு 2.8.2015 அன்று காலை 8 மணிக்கு முழு கை போட்ட டீசா்ட், ஜீன்ஸ் பேண்ட் , ரூ. 22500, செல்போன் ஒன்று ஆகியவை விஸ்வநாதன் வீட்டில் Hall ல் இருந்தது.Hall ல் எந்த இடத்தில் இருந்தது என்று ஞாபகம் இல்லை எல்லாம் ரத்தம் கறை படிந்திருந்தது. TN 64 C 3229 வாகனம் விஸ்வநாதன் வீட்டின் வெளியே இருந்தது. இவைகளை எடுத்ததற்கான அத்தாட்சியில் நானும், தலையாரியும் கையொப்பம் போட்டோம். வேறு பொருட்கள் எடுத்தோமா என்று ஞாபகமில்லை. **அதற்கான அத்தாட்சி அ.சா.ஆ-8**. என்னிடம் காட்டப்படும் **முழு கை போட்ட டீசர்ட் அ.சா.பொ.15, ஜீன்ஸ் பேண்ட் அ.சா.பொ.16,** அதன் பிறகு முத்துக்குமாா் தனது வாக்குமூலத்தில் தனது வீட்டிலும் 2 மோதிரம், பேங்க்ல் அடகு வைத்த சீட்டு, ரத்தக்கறை படிந்த ஜீன்ஸ் பேண்ட் இருப்பதாக சொன்னதன் பேரில் அதே நபர்கள் காலை 9.30 மணிக்கு முத்துக்குமார் வீட்டிற்கு சென்றோம். **முத்துக்க்குமார் ஒப்புதல் வாக்குமுலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-9.** முத்தக்குமாா் வீட்டில் அவா் சொன்னதன் அடிப்படையில் 2 மோதிரம், பேங்க்ல் அடகு வைத்த சீட்டு, ரத்தக்கறை படிந்த ஜீன்ஸ் பேண்ட, டீசா்ட், கத்தி உறை பிளாஸ்டிக்கில் இருந்ததாக ஞாபகம். கத்தி எடுத்தார்களா என்று ஞூாபகம் . சாட்சி மறுபடியும் ரத்தக்கறையோடு கத்தி எடுத்ததாக சொன்னாா். இதை எடுத்தற்கு நானும், தலையாரியும், எதிரிகள்' இருவரும் கையொப்பம் போட்டோம். **அது அ.சா.ஆ.10. முத்துக்குமார் வீட்டில் இருந்து எடுத்த ஜீன்ஸ் பேண்ட் அ.சா.பொ. 17 , டீசர்ட அ.சா.பொ.18, கத்தி உறை அ.சா.பொ. 19** அன்றைய தினமே காலை 11 மணிக்கு சுமித்ரா வீட்டிற்கு எதிரிகள் இருவரும் அவா்களது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னதன் அடிப்படையில் சுமித்ரா வீட்டில் இருந்து தாலி செயினில் போட்ட குண்டு, காசு, ரூ.9910 வேறு பொருட்கள் ஞாபகமில்லை. அதற்கான **அத்தாட்சியில் நானும், தலையாரியும்' இருவரும் கையொப்பம் போட்டோம். அந்த அத்தாட்சி' அ.சா.ஆ-11.** அதன் பிறகு நாங்க்ள் எங்கள் அலுவலகத்திற்கு போய்விட்டோம். அதன் பிறகு 12.8.2015 அன்று காவல் நிலையத்தில் இருந்து எங்களை மீண்டும் அழைத்தாா்கள். இரண்டு எதிரிகளையும் மீண்டும் போலிசாா் பெயில் எடுத்து விசாரித்தாக்ள். அதன் பிறகு மதியம் 1 மணிக்கு நாஙகளும், போலிசாரும், எதிரிகளும் அண்ணாநகரில் உள்ள FEB Bank க்கு சென்றோம். அடகு வைத்த சீட்டு , சீடி, பென் டிரைவ் ஆகியவைகளை வங்கியில்

சேகரித்தோம். வேறு பொருட்கள் எடுத்ததற்கு ஞாபகமில்லை. 12.8.2015 அன்று எதிரிகள் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் அண்ணாநகரில் உள்ள வங்கிக்கு மதியம் 12 மணிக்கு சென்றோம். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12.** அதன் பேரில் வங்கியில் இருந்து எடுக்கப்பட்ட அடகு வைத்த சீட்டு , சீடி, பென் டிரைவ் ஆகியவைகளை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். **அது அ.சா.ஆ-13. அடகு வைத்த சீட்டு அ.சா.பொ.20 சீடி அ.சா.பொ. 21 , பென் டிரைவ் அ.சா.பொ. 22 சீடியையும், பென் டிரைவ்யையுயம்** எதிரிகள் வந்தார்கள் என்று போட்டு பார்த்தோம். அதில் எதிரிகள் வந்தது தெரிந்தது. அந்த சிடியில் ஆஜர் எதிரி விஸ்வநாதன் அங்கு வந்தது தெரிந்தது. நீதிமன்றத்தில் சாட்சிக்கு முன்பாக சீடியும், பென் டிரைவ்ம் போட்டு பார்க்கப்பட்டது, அதை பார்த்த சாட்சி ஆஜர் எதிரியை வங்கிக்கு வந்ததை அடையாளம் காட்டுகிறார். அதன் பிறகு மதியம் 2 மணியா, 1 மணியா என்று ஞாபகமில்லை. விஸ்வநாதன் வீட்டிற்கு சென்றோம். அங்கு மொபைல் போன், சிம் கார்டு, துணி கை உறை கிளவுஸ் ஆகியவைகளை கைப்பற்றினோம். அதற்கான அத்தாட்சி **அது அ.சா.ஆ-14. என்னிடம் கார்ட்டப்படும் செல்போன் அ.சா.பொ. 23 .** மதுரை அமெரிக்கன் காலேஜ் எதிர்ப்புறம் உள்ள துணிக்கடையில் எதிரிகள் சொன்னதன் பேரில் ரூ.2015 க்கான ரசீதை அந்த கடையில் இருந்து கைப்ப்றறினோம். அதற்கான **அத்தாட்சி அ.சா.ஆ.15. என்னிடம் காட்ப்படும் அந்த ரசீது அ.சா.பொ. 24.** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )</u>**

எங்கள் துறையின் சார்பாக சட்ட வகுப்புகள் நடத்தப்படும். அந்த பயிற்சியில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலங்கள் சட்ட ரீதியாக செல்லாது என்றால் அது பற்றி என்க்கு தெரியாது. பொதுவாக கிராம நிர்வாக அலுவலகத்தில் கரும்பலகை பொருத்தப்பட்டிருக்கும், அதில் அன்றாட நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டிருக்கும் எத்தனை மணிக்கு திரும்ப வந்துவிடுவோம் என்றும் குறிப்பிடப்ப்ட்டிருக்கும். கிராம நிர்வாக அலுவலருக்கு பொதுவாக டைரி இருக்கும். பொதுவாக நாங்கள் டைரி பயன்படுத்துவது கிடையாது. நாஙகள் குறிக்கும் டைரியில் உயர் அதிகாரிகள் கையொப்பம் இட வேண்டும். எனக்கு சம்மன் மூலமாக போலிசார் அழைப்பு விடவில்லை, போன் மூலம் தான் அழைத்தார்கள். அரசாணை நிலை எண். 212 தேதி 29.4.1999ன் படி டைரி பயன்படுத்தி அதில் வட்டாட்சியரின் கையொப்பம் பெற வேண்டும்

என்பது விதி. இந்த வழக்கில் நான் அவ்வாறான டைரி பயன்படுத்தவில்லை. சம்பவ சமயத்தில் உள்ள என்னுடைய அலுவலக முகவரி மாடக்குளம், பழங்காநத்தம் பாலத்திற்கு கீழே உள்ளது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் மலைமகள் எனது நிர்வாக எல்லைக்குட்படட்டது ஆகும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எனது அலுவலகத்தில் இருந்து சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ சமயத்தில் என்னுடைய வீட்டு முகவரி 182 , ஆரப்பாளையம் கண்மாய் கரை, மதுரை. என்னுடைய கிராம எல்லைக்குள் கொலை, கொள்ளை, அசாம்பாவிதம் நடந்ததால் காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டும். இந்த வழக்கு சம்பந்தமாக நான் எப்போது காவல் நிலையத்திற்கு தெரிவித்தேன் ஏ்ன்றால் காவல் நிலையத்தில் இருந்து தான் எனக்கு தெரிவித்தார்கள். என்க்கு இந்த வழக்கு பற்றி 2.8.2015 அன்று தான் தெரியும். என் உதவியாளர் சம்பவ சமயத்தில் மாடக்குளத்தில் தான்  இருந்தார் , முகவரி தெரியாது. எதரிகள் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடிந்தது என்று குறிப்பிடவில்லை. எஸ்.எஸ்.காலனி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எஸ்.ஐ தான் தகவல் சொன்னார். எங்கள் அலுவலகத்தை தலையாரி தான் திறப்பதும், மூடுவதும். வழக்கமாக எங்கள் அலுவலகம் காலை 9 மணிக்கு திறந்து விட்டு மாலை 5.30 மணிக்கு மூடுவது உண்டு. எனக்கு போன் வந்தவுடன் ஆரப்பாளையத்தில் இருந்து நேரடியாக காவல் நிலையத்திற்கு நான் என் இருசக்கர வாகனத்தில் சென்றேன். தலையாரிக்கு காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி நான் தான் தகவல் சொன்னேன். தலையாரியை நான் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னேன் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தகவல் சொல்லும் போது தலையாரி அவரது வீட்டில் இருந்தார். இந்த வழக்கு நடந்த சம்பவ இடத்திற்கு நானும் தலையாரியும் செல்லவில்லை. 2.8.2015 அன்று இது சம்பந்தமாக என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேன். என்னுடைய உயர் அதிகாரிகளிடம் இருந்து நான் அன்று வேலையில் இருந்தேன் என்று சான்று பெறவில்லை. எங்கள் அலுவலக கரும்பலகையில் இந்த வழக்கு சம்பந்தமாக நானும் தலையாரியும் செல்கிறோம் என்று குறிப்பிடவில்லை. என்னுடைய உதவியாளர் மாடக்குளத்தில் இருந்து வண்டியில் வந்தார். உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்த ஆவணங்களை நான் கொண்டு வரவில்லை. 6 அத்தாட்சிகள், ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவுமே என் முன்பாக தயார் செய்யவில்லை என்றும் எல்லாமே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு என்னிடம்

கையொப்பம் மட்டும் பெற்று கொண்டார்கள் என்றால் சரியல்ல. 2.8.2015 அன்று எதிரி விஸ்வநாதன் வீட்டிற்கு நான் எனது வண்டியில் செனறேன், தலையாரி அவருடைய வாகனத்தில் வந்தார், போலிசார் அவர்களுடைய வாகனத்தில் வந்தார்கள். அன்று காலை உணவு ஹோட்டலில் தான் சாப்பிட்டேன். எந்த ஹோட்டல் என்று ஞாபகமில்லை, நானும் தலையாரியும் சாப்பிட்டோம். போலிஸ் ஜீப்பில் வந்த அதிகாரிகள் யார் என்று தெரியுமா என்றால் எஸ்.ஐ வந்தார், போலிசார் வந்தாக்ள். நான் பெண் என்பதால் பெண் போலிசார் யாரும் வரவில்லை. விஸ்வநாதன் வீட்டில்சுமார் அரை மணி நேரத்திற்கு கூடுதலாக இருந்தோம், எவ்வளவு நேரம் என்று சரியாக ஞபாகமில்லை. விஸ்வநாதன் வீடடில் இருந்து எடுத்த வாகனத்தில் ' ஆர்.சி புக், இன்சுரன்ஸ் ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. விஸ்வநாதனுக்கும் வாகனத்திற்கும் சம்பந்தமில்லை என்பதால் தான் மேற்படி ஆவணங்கள் கைப்பற்றவில்லை என்றால் வண்டி அவருடையது தான் ஆனால் ஆவணங்கள் கைப்ப்ற்றவில்லை. விஸ்வநாதன் வண்டி என்று போலிசார் சொல்லி தான் தெரியும். காவல் நிலையத்திற்கு 5 மணிக்கு செல்லும் போது எத்தனை காவலர்கள் இருந்தாக்ள் என்று ஞாபகமில்லை. நான் காவல் நிலையம் சென்ற போது எனக்கு உதவி செய்தவற்கு பெண் போலிசார் யாரும் இல்லை. என் முன்னிலையில் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கிருந்த போலிசார் தான் எழுதினார்கள். அதில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினாகள். 6 பக்கம் கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தை எழுத 1 மணி நேரம் ஆகும். எஸ்.எஸ்.காலனி காவல் நிலையம் ஒரு புதுமையான காவல் நிலையம் என்றும் அங்கு அதில் சிசிடிவி கேமரா, Wifi எல்லா வசதிகளும் உண்டு என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் உண்மையில் காவல் நிலையம் போகவில்லை என்றும் அதனால தான் எனக்கு ஞாபகமில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை விசாரிக்கும் போது போலிசார் தரப்பில் வீடியோ எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் எல்லா அத்தாட்சியிலும் ஒரே நபரால் எழுதப்பட்ட கையெழுத்து தான் என்றால் 3 அத்தாட்சிகள் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது. அத்தாட்சியை போலிசார் தான் ' எழுதினார்கள் எந்த போலிசார் என்று ஞாபகமில்லை. 12.8.2015 அன்று காலையில் வந்த நான் இரவு 8 மணிக்கு வீட்டிற்கு போனேன். என்னுடைய கிராமம் மாடக்குளம் பகுதியில் விஐபிகள் வசிக்கும் பகுதி என்றால் சரிதான். விஐபிகள் வசிக்கும் பகுதி என்பதால் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். அதே போல் மதுரை

மாடக்குளத்தில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனையில் உள்ள சிக்னல் அருகே சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டிருக்கும். காளவாசல் சிக்னல் பகுதியிலும் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டிருக்கும். நான் சென்ற பேங்க் அண்ணாநகரில் உள்ளது, எந்த பகுதி என்று குறிப்பாக ஞாபகமில்லை. நான் சென்ற பேங்க் எத்தனாவது தளத்தில் உள்ளது என்று ஞாபகமில்லை. நான் போகவில்லை என்றும் நான் அவ்வாறு போயிருந்தால் அந்த வங்கி எந்த தளத்தில் உள்ளது எனறு என்னால் சொல்லமுடியும். FED Bank என்பது ஒரு சென்ட்ரல் பேங்க் ஆகும். அதற்கும் ஒரு வேலை நேரம் உண்டு. பேங்க் நுழைவாயில் அதன் வேலை நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நேரம் என்ன என்று ஞாபகமில்லை. நான் உண்மையில் அந்த வங்கிற்கு சென்றருந்தால் வேலை நேரம் தெரிந்திருக்கும் எல்லாமே நான் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளேன் எனறால் சரியல்ல. நான் அந்த வங்கியில் சிசிடிவி Footage யை காப்பி பண்ணி வங்கி மேனேஜா் காவலா்களுக்கு கொடுத்தாா். நான் அந்த வங்கி உள்ள சா்வா் அறைக்கு சென்றேன். அந்த அறை எத்தனைக்கு எத்தனை அளவு என்றால் ஞாபகமில்லை. FED Bank ல் தோராயமாக 20 சிசிடிவி கேமராகக்ள் இருக்கும் என்றால் ஞாபகமில்லை. உண்மையில் நான்' அன்றைய தினம் சென்றிருந்ததால் என்னுடைய பதிவுகளும் கேமராவில் பதிவாகி இருக்கும். நான் போனேன் என்பதற்கு சிசிடிவி கேமராவின் Footage யை பெறவில்லை. வருகையாளா் பதிவேட்டில் விஸ்வநாதன் பெயா் உள்ளதா என்றால் முத்துக்குமாா் பெயா்' தான் உள்ளது. நகை அடகு வைத்த ரசீதிலும் முத்துக்குமாா் பெயா் தான் உள்ளது விஸ்வநாதன் பெயா் இல்லை. FED Bank இருக்கும் கட்டிடத்தில் பெயா் தெரியாது. நான் படி வழியாக ஏறி சென்றேனா லிப்ட்டில் ஏறி சென்றேனா என்று ஞாபகமில்லை. அந்த காம்பிள்க்ஸில் ஏதாவது குறிப்பிடும் படியான பகுதி ஏதாவது இருந்ததா என்றால் ஞாபகமில்லை. லேக்ரோ டிரஸ் கடைக்கு சென்ற போது அங்கு சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் ஞாபகமில்லை. அத்தனை இடங்களும் நான் என் வண்டியில் தான் சென்றேன். என்னுடைய தலையாரி அவருடைய வண்டியில் தான் வந்தாா். சட்ட வகுப்புகளில் சொல்லி கொடுத்தவாறு கொடூர குற்றங்கள் ஏதாவது நடந்ததால் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் 31.7.2015 அன்று நடந்த குற்ற நிகழ்வை ஏன் காவல் நிலையத்திற்கு தெரிவிக்கவில்லை என்றால் அவ்வாறான நிகழ்வை எனக்கு 2.8.2015 அன்று

தான் தெரியும். இவ்வாறான குற்ற நிகழ்வு எனக்கு தெரியாமல் போனது எனது பணி குறைபாடு என்றால் பெரிய கிராமம் என்பதால் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை. எனது உயர் அதிகாரி கேட்டால் என் கவனத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சொல்லமுடியாது. நான் போலிசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்ற போது என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். நான் தகவல் சொன்ன என்னுடைய உயர் அதிகாரியின் பெயர் தற்போது ஞாபகமில்லை. ஆர்.ஐக்கு என்னுடைய போனிலிருந்து தான் தகவல் சொன்னேன். அந்த போனின் உடைய சிடிஆர் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் நான் காவல் நிலயத்திற்கு சென்றிருந்தால் என் செல்போனின் சிடிஆர், டைரி குறிப்புகள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 12.8.2015 அன்று ஜமாபந்தி நடந்திருந்ததது என்றால் சரியல்ல. 12.8.2015 அன்று ஜமாபந்தி நடந்தது என்றும் அதற்கு நானும் என் தலையாரியும் சென்றிருந்தோம் என்றும் அதற்காக தயார் செய்திருந்த பேப்பரில் நானும் என் தலையாரியும் கையொப்பம் செய்திருந்தோம் என்றால் சரியல்ல. இந்த

வழககிற்கும் எதிரிக்கும் சம்பந்தமமில்லை என்றும் போலிசுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக சுமார் 2.8.2015ம் தேதியும், 12.8.2015ம் தேதியும் விசாரித்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.